முருகப்பெருமான் துணை

**மகான் குருராஜர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.06.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞானக்கடலே அரங்கா வாழ்க
ஞானிகளை உருவாக்க வேண்டி
ஞானபண்டிதன் அம்சமாக வந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது விடைதிங்கள்
வரங்களென மூவேழு திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் **21** ம் நாள், **04.06.2023**, ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை குருராஜர் யானும்
அகிலம் உயர்வுபெற உரைப்பேன்
வாசி வென்ற ஞானிகள் படை
வலம் வந்து பிரணவக் குடிலை
4. பிரணவக் குடிலை காத்துவர
பிரணவராஜன் கட்டளையாக
சரவணச் சுடரில் கலந்து காட்சி
சகலரும் தந்து வருதலுற
5. வருகவே இத்தகைய சக்தி
வாழ்வில் வரமாகப் பெற
ஆறுமுக அரங்கன் வாழ்
அறிவிப்பேன் துறையூர் எல்லை நாடி
6. நாடியே பிரணவக் குடிலை
நன்மை கருதி அனுகிட
தேடியே சக்திகள் கிட்டும்
தேசிகன்பால் தீட்சை ஏற்று
7. ஏற்றுமே குடிலில் தருமத்தில்
இயன்ற பொருளுதவி செய்து
ஆற்றல்தரும் தொண்டும் புரிய
அனைத்து ஞானிகளின் ஆசி கிட்டி

8. கிட்டியே அஞ்ஞான நிலை கடந்து
குருவருள் எனும் ஞான வாழ்வினை
தட்டாது ஏற்றுத் தெளிவும்
தயவும் தரும சிந்தையும் பெருகி
9. பெருகியே வினைகளை வெல்வர்
பேதங்கள் அனைத்தும் கடந்து
தருமவழியே ஒரேவழி சிறந்தவழியென
தவறாமல் அரங்கனை தொடர்ந்து
10. தொடர்ந்துமே சேவைபல ஆற்றி
தெய்வ நெறியாம் சன்மார்க்க
இடர்வெல்லும் வழியில் திளைத்து
எந்தவித பின்னடைவும் இன்றி
11. இன்றியே ஞானவான்களாக
இணையிலா ஞானிகளாகவே
நன்றுதரும் ஞான ஆட்சியை
நாடெங்கிலும் நிறுவி சிறப்பர்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—